

# Happy Easter!

" The story of Easter is the story of God's wonderful window of divine surprise."

## படப்பை குருசேகர இறைமக்கள் அனைவருக்கும் உயிர்த்தெழுதல் திருநாள் வாழ்த்துக்கள்!

### குருசேகரக் குழு உறுப்பினர்கள்

திரு. S. ஆஸ்டின் ஜோப்
திரு. P. சாலமோன் சந்திரபாபு
திரு. A. பஞ்சம்
திருமதி. P. ஜெயலஷ்மி
திரு. R. பார்த்தசாரதி மனோவா
திரு. V. எட்வர்ட் காலின்ஸ்
திருமதி. P. மின்னலா சுகந்தி
திருமதி. ஜாய் கென்னடி
திரு. M. சாமுவேல்
திரு. M. மோகன்ராஜ்
திரு. S. லாரன்ஸ் தர்மராஜ்

**திரு. T. டேனிஸ் பிரபாகர்**
செயலர்

**திரு. A. ராபின் சுந்தர்ராஜ்**
பொருளர்

**Rev. Y. தேவகுமார்**
ஆயர் & சேகரத்தலைவர்
CSI படப்பை குருசேகரம்

# HAPPY EASTER 2026!


சரோஜா அச்சகம்,படப்பை 9382853469

தென்னிந்தியத் திருச்சபை – சென்னைப் பேராயம் படப்பை குருசேகரம்
CSI கிறிஸ்து நாதர் ஆலயம், டேவிட் நகர், படப்பை – 601 301.

# விழுதுகள்

## ஏப்ரல் - 2026

(உறுப்பினர் பயன்பாட்டிற்கு மட்டும்)



## ஆயர் மடல்

கிறிஸ்துவுக்குள் என் அன்பான திருச்சபை குடும்பத்தினரே, இயேசுகிறிஸ்துவின் திருப்பெயரில் இறைமக்களாகிய உங்கள் அனைவருக்கும் உயிர்த்தெழுந்த திருநாள் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் அல்லேலுயா!

அவர் மெய்யாகவே உயிர்த்தெழுந்தார் அல்லேலுயா!

ஆண்டவராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலையே நாம் ஈஸ்டர் திருநாளாக கொண்டாடுகிறோம். **ஈஸ்டர்** என்ற வார்த்தைக்கு **வசந்த காலம்** என்ற பெயரும் உண்டு கிருத்தவர்களாகிய நமக்கு இயேசுவின் உயிர்த்தெழுதல் என்பது கிறிஸ்துவின் மீதான நம்பிக்கையின் மணி மகுடமாகும். ஒவ்வொரு ஆண்டும் தவக்காலம் தொடங்கி நாற்பது நாட்கள் கிறிஸ்துவின் பாடு, மரணம், உயிர்த்தெழுதலை தியானிக்க அவருடன் நாம் பயணிக்கும் போது நம் வாழ்விலும் உயிர்ப்பின் அற்புதத்தை புதுப்பித்துக் கொள்ள அழைக்கப்படுகிறோம். உயிர்த்தெழுதல் நிகழ்வில் வாரத்தின் முதல் நாள் விடியற்காலை கல்லறைக்குச் சென்ற பெண்களிடம் அவர் இங்கே இல்லை; அவர் கூறியபடியே உயிருடன் எழுப்பப்பட்டார். மத்தேயு 28:6

எனும் வானதூதரின் வார்த்தைகள் வெற்று வார்த்தைகள் அல்ல. மாறாக நமது வாழ்வின் நம்பிக்கைக்கும் விசுவாசத்திற்கும் உரமிடும் உறுதியான அடித்தள வார்த்தைகள் இயேசுவின் காலியான கல்லறை மனித வாழ்வின் முடிவு மரணமல்ல என்பதையும் நம்பிக்கையற்று பயத்தின் சங்கிலிகளால் கட்டப்பட்டிருந்த சீடர்களுக்கும் மனுக்குலத்திற்கும் மரணத்தை வென்ற கிறிஸ்து நமக்கு இருக்கிறார். அவர் நம் துன்பங்களை மகிழ்ச்சியாகவும் மரணத்தை வாழ்வாகவும் மாற்ற முடியும் எனும் நம்பிக்கையை கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நமக்குத் தருகிறது.

ஆதித்திருச்சபையின் போதனைகளில் முதலாவது அறிவிக்கப்பட்ட உண்மை கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்கும். (தி.தூ.பணிகள் 2:36) அதுவே ரோம அரசின் ஒடுக்குதலுக்கும், துன்புறுத்தலுக்கும் அச்சுறுத்தலுக்கும் நடுவே ஆதித்திருச்சபை விசுவாசிகளுக்கு நம்பிக்கையையும் துணிவையும் தந்தது. **கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்.** (1 கொரி. 15:14) என்று உயிருக்கு பயந்து சிதறி ஓடிய சீடர்கள் உயிர்த்த ஆண்டவருக்கு சாட்சி பகரும் அளவிற்குத் துணிவைத் தந்தது இயேசுவின் உயிர்த்தெழுதல் வல்லமையே. அன்பானவர்களே நம் வாழ்வின் சோதனைகளை எதிர்கொள்ளவும், கவலை, பயம், தோல்விகளிலிருந்து மீண்டு வரவும் உயிர்த்த ஆண்டவரில் நம்பிக்கைக் கொள்வோம். இயேசு இறந்த புனித வெள்ளியில் உலகம் இருண்டதை போல உலகில் தற்போது சமாதானம் இல்லாமல் காணப்பட்டாலும் வாழ்க்கை எனும் சிலுவை நம்மால் சுமக்க முடியாத பாரமாக அழுத்தினாலும், மரணம் வென்று விட்டதைப் போலத் தோன்றினாலும் கவலைபடாதிருங்கள் தீயோனாகிய சத்துருவையும், மரணத்தையும், பாவத்தையும் சிலுவையில் வெற்றிக்கொண்ட இயேசு **"உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்"** மத்தேயு 28:20 என வாக்குரைத்து இருக்கிறார். அவர் நம்மை வழிநடத்துவார், நமக்கு புதுவாழ்வு தருவார் ஆமென்.

**EASTER CANTATA : March 2026**

ஆண்டவரின் மாபெரும் கிருபையால் இவ்வாண்டு நமது குருசேகரத்தில் ஒருங்கிணைந்த ஈஸ்டர் கண்டாட்டா இயேசுவின் சிலுவைப் பாடு, மரணம், உயிர்த்தெழுதல் ஒளி-ஒலி நாடகம் டேவிட் நகர் கம்யூனிட்டி சென்டரில் சிறப்பாக நடைபெற்றது. அனைவருக்கும் மிகுந்த ஆசீர்வாதமாக இருந்தது. சுமார் 1400 க்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு ஆண்டவரின் சிலுவை பாடு, மரணம், உயிர்ப்பு நிகழ்ச்சியை கண்டனர். இதில் ஆண்டவரை அறியாத பலர் பங்கேற்று நற்செய்தியை அறிந்து கொண்டது ஆண்டவருக்கு மகிமையாக அமைந்தது. இந்த பெரும் ஊழியத்தில் சிறப்பாக செயல்பட்டு கடினமாக உழைத்த சிறப்பு ஏற்பாட்டுக் குழுவினரையும், சேகர குழுவையும், சபை ஊழியர்களையும், ஜெபத்தாலும் காணிக்கையினாலும் தாங்கின படப்பை திருச்சபையாரையும் மனதார வாழ்த்துகிறேன். இறை ஆசி உங்களில் பெருக ஜெபிக்கிறேன்.

**விடுமுறை விவிலியப் பள்ளி – 2026**

இவ்வாண்டு நடைபெறும் விடுமுறை விவிலிய பள்ளிக்கு பெற்றோர் தங்கள் குழந்தைகளை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். கடந்த ஆண்டுகளைப் போல சபையார் விடுமுறை விவிலியப் பள்ளி திருப்பணியை தங்கள் ஜெபத்தாலும், காணிக்கையாலும் தாங்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இம்மாதம் பிறந்தநாள், திருமண நாள் காணும் ஒவ்வொருவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்றேன். திருச்சபையார் அனைவருக்கும் உயிர்த்தெழுந்த திருநாள் நல்வாழ்த்துக்கள்.

இறைபணியில் உங்கள் ஆயர்,
அருள்பணி **Y. தேவகுமார்,**
98401 98476



## பெண்கள் பகுதி

### பெண்கள் - உயிர்ப்பின் முதல் சாட்சிகள்

திருச்சபைப் பெண்கள் அனைவருக்கும் உயிர்த்தெழுதல்
திருநாள் நல்வாழ்த்துக்கள் மகிழ்வுடன் தெரிவிக்கிறேன் !

**...பயப்படாதிருங்கள், சிலுவையில் அறையப்பட்ட நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறீர்கள், அவர் உயிர்த்தெழுந்தார்: அவர் இங்கேயில்லை: இதோ, அவரை வைத்த இடம்.**

மாற்கு 16:6

வாரத்தின் முதல் நாள் அதிகாலையில் இயேசுவின் உடலில் யூதர்களின் வழக்கத்தின்படி நறுமணப் பொருட்களை பூசுவதற்காக கல்லறைக்கு சென்ற பெண்களுக்கு உயிர்த்த ஆண்டவர் பற்றி நற்செய்தி அறிவிக்கப்படுகிறது.

நமது மீட்பர் இயேசுவின் உயிர்ப்பு பற்றிய அறிவிப்பு உயிர்ப்பின் முதல் சாட்சிகளாக பெண்களுக்கே அறிவிக்கப்பட்டது. ஓய்வு நாள் முடிந்ததும் வாரத்தின் முதல் நாள் ஞாயிற்றுக்கிழமை அடக்க சடங்கை நிறைவேற்றும் நோக்கில் மகதலேனா மரியா, யாக்கோபின் தாய் மரியா, சலோமி இந்த மூன்று பெண்களும் கல்லறைக்குச் சென்றனர். இவர்களே இயேசுவின் சிலுவை அருகே நின்ற பெண்கள். இவர்கள் கல்லறைக்கு சென்ற வழிபோக்கர்கள் அல்ல. தங்கள் வாழ்வை இறைப்பணிக்காக அர்ப்பணித்துக் கொண்டு தங்களின் உடைமைகளால் அவருக்கு (ஊழியம்) பணிவிடை செய்த பெண் சீடர்கள். (லூக்கா 8:3)

இவர்கள் அதிகாலையில் இயேசுவின் கல்லறையை நோக்கி போகும் போதே கல்லறையை மூடிவைத்தக் கல்லை நமக்காக யார் புரட்டுவார்கள்? (மாற்கு 16:3) என்னும் கேள்விகளோடு சென்றார்கள். அங்கே ஓர் அதிசயம் அவர்களுக்கு காத்திருந்தது. அந்தப் பெரிய கல் புரட்டப்பட்டிருப்பதைக் கண்டார்கள். (மாற்கு 16:4) சிலுவையில் அறையப்பட்ட இயேசு உயிருடன் எழுப்பப்பட்டார் என்னும் மாபெரும் நற்செய்தி தேவதூதர்களால் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. அழுகையும், அங்கலாய்ப்பும்



நிறைந்தவர்களாய் நறுமண தைலத்துடன் கல்லறைக்குச் சென்ற பெண்களுக்கு இயேசுவின் உயிர்த்தெழுதலின்செய்தி மகிழ்ச்சி என்னும் தைலத்தால் நிரம்பியது. அவர்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறியது. அழுது கொண்டிருந்த மகதலா மரியாவைப் பார்த்து உயிர்த்த இயேசு அம்மா, ஏன் அழுகிறாய்? என்று கேட்டார். நொருங்குண்டதும் நறுங்குண்டதுமான உள்ளத்தை புறக்கணியாத ஆண்டவர் நாம் அழுவதையோ துயரப்படுவதையோ விரும்புவதில்லை. நம் கண்ணீரைத் துடைத்து ஆறுதலையும் மகிழ்ச்சியும் நம் வாழ்வில் நிறைவாகத் தருவார். அவர் மீது உங்கள் பாரத்தை வைத்துவிடுங்கள். அவர் உங்களுக்காக யாவையும் செய்து முடிப்பார்

"யூத ராஜ சிங்கம் உயிர்த்தெழுந்தார்
உயிர்த்தெழுந்தார் நரகை ஜெயித்தெழுந்தார்."

நமக்காக உயிர்த்தெழுந்த கிறிஸ்து நம்மோடு வாழ்கிறார். இதுவரை நம்மைக் காத்தவர் தொடர்ந்து நம்மையும் குடும்பத்தையும் உயிர்த்தெழுதலின் வல்லமையால் காத்து வழி நடத்துவார் ஆமென்.

அனைவருக்கும் ஈஸ்டர் திருநாள் வாழ்த்துக்கள்!

இறைபணியில்
**திருமதி. ஜாய்சிலின் தேவகுமார்**
ஆயரம்மா / பெண்கள் ஐக்கிய சங்கத் தலைவி

<u>**நினைவூட்டல் :**</u>

அன்பான திருச்சபை குடும்பத்தாரே சபை உறுப்பினர் படிவம் புதுப்பிக்கும் பணியில் இதுவரைக்கும் அங்கத்தினர் படிவங்களை பெற்றுக் கொண்டவர்கள் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம் பெற்றுக் கொள்ளாதவர்கள் சபையில் பெற்றுக் கொண்டு இந்த மாத இறுதிக்குள் சமர்ப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

ஆயர்

# 2026 – ஏப்ரல் மாத ஆராதனை ஒழுங்குகள்

| நாள்/கிழமை | திருமறைப்பாடம் | இறைசெய்தித் தலைப்பு | நடத்துனர்/செய்தியாளர் |
|---|---|---|---|
| 01-04-2026<br>புதன்<br>காலை 6.30 | மாதப்பிறப்பு<br>திருவிருந்து வழிபாடு | | ஆயர் |
| 03-04-2026<br>புனித வெள்ளி<br>காலை 10.45 | **மும்மணி த்தியானம்**<br>முன்னுரை | | ஆயர் |
| | சிலுவைத் திருமொழி 1<br>லூக்கா 23:34 | | Rev. ஜுலியஸ் ராஜதுரை |
| | சிலுவைத் திருமொழி 2<br>லூக்கா 23:43 | | Rev. ராஜேந்திரன் |
| | சிலுவைத் திருமொழி 3<br>யோவான் 19:25-27 | | ஆயர் |
| | சிவவைத் திருமொழி 4<br>மாற்கு 15:34 | | Rev. ஜுலியஸ் ராஜதுரை |
| | சிலுவைத் திருமொழி 5<br>யோவான் 19:28 | | Rev. ராஜேந்திரன் |
| | சிலுவைத் திருமொழி 6<br>யோவான் 19:30 | | I. தாமஸ் |
| | சிலுவைத் திருமொழி 7<br>திருப்பாடல்கள் 31 லூக்கா 23:34<br>முடிவுரை | | ஆயர் |
| 05-04-2026<br>திருவிருந்து<br>ஞாயிறு<br>காலை 5.30 | எசேக்கியேல்<br>37:11-42<br>திருப்பாடல்கள் 49<br>2 கொரி. 5: 1-10<br>யோவான் 20 : 1-8 | உயிர்த்தெழுதல் :<br>மரணத்தின்<br>மீது வெற்றி | ஆயர் |
| 12-04-2026<br>ஞாயிறு<br>காலை 8.30 | ஏசாயா 45:21-25<br>திருப்பாடல்கள்<br>35:18-28<br>பிலிப்பியர் 3:18-28<br>யோவான்<br>20 : 21-29 | என் ஆண்டவரே!<br>என் கடவுளே! | திரு. கிங்ஸ்லி மோகன் |



| நாள்/கிழமை | திருமறைப்பாடம் | இறைச்செய்தித் தலைப்பு | நடத்துனர்/செய்தியாளர் |
|---|---|---|---|
| 19-04-2026<br>திருவிருந்து<br>ஞாயிறு<br>காலை 8.30 | 1 அரசர்கள் 19:1-8<br>திருப்பாடல்கள் 23<br>திருத்தூதர் பணிகள்<br>27:27-36<br>யோவான் 21 : 1-14 | உணவருந்த<br>வாருங்கள் :<br>உயிர்த்த<br>ஆண்டவரின்<br>அழைப்பு | ஆயர் /<br>திரு. யோகராஜ் |
| 26-04-2026<br>ஞாயிறு<br>காலை 8.30 | விடுதலைப்பயணம்<br>33:12-16<br>திருப்பாடல்கள் 121<br>திருத்தூதர் பணிகள்<br>18:1-11<br>லூக்கா 24 : 13-33 | உயிர்த்த ஆண்டவர் :<br>நமது உடன்<br>பயணி | அருள்திரு.<br>லெனார்டு<br>பாஸ்கர்<br>சாமுவேல் |
| புனித வாரம் | | | |
| 30-03-2026<br>திங்கள்<br>மாலை 7.00 | சமநோக்கு நற்செய்தி<br>நூல்களில் சிலுவை | | திரு. பெனடிக்ட்<br>ஆபிரகாம் |
| 31-03-2026<br>செவ்வாய்<br>மாலை 7.00 | யோவானின் எழுத்துகளில்<br>சிலுவை | | திரு.கிறிஸ்டேவிடார் |
| 01-04-2026<br>புதன்<br>மாலை 7.00 | பவுலின் கடிதங்களில் சிலுவை | | Dr M.சந்தோஷ்குமார் |
| 02-04-2026<br>கட்டளை<br>வியாழன்<br>மாலை 7.00 | வாழ்வளிக்கும் அன்பு<br>திருவிருந்து வழிபாடு | | ஆயர் |

## ஏப்ரல் – 2026 தங்கள் பிறந்த நாள் காணுவோர் :

1 செல்வன். அட்லி ஜோகன்
2 திரு. பென்னட் காட்வின்
திரு. டேவிட் நெப்போலியன்
திருமதி. ஜெபக்கனி டிக்ஸன்
திரு. கலைக்குமார்
திரு. யோகன்னன்
திருமதி. செலினா வின்ஃப்ரட்
3 திரு. கிறிஸ்துதாஸ் ரீமஸ்
திருமதி. சந்திரிகா ரீமஸ்
4 திரு. மோகனசந்திரன்
திருமதி. அனி ரூபி பிரியா
5 திருமதி. பாக்கிய ஷீலா
திரு. விஜய் டினோ மார்ட்டின்
6 செல்வன். ஸ்டீவ் ஆல்வின் ஜாப்
7 திருமதி. பெரில் பாஸ்கர்
திரு. ஜெரேமியா
திருமதி. ஹெலன் மேரி பிரதீப்
திரு. பீட்டர் பஞ்சாட்சரம்
09 திரு. ஜான் மேத்யூ
திரு. பஞ்சம்
திருமதி. ஜூலியட் எஸ்தர்
திரு. சந்தோஷ் சாலமோன்
10 திரு. பிரான்சிஸ்
திருமதி. ஷீபா ஃப்ளாரன்ஸ்
செல்வன். ஜான் சாமுவேல்
செல்வி. எலிஸா குளோரி
11 திருமதி. சரளா மேரி தயானந்தன்
திருமதி. மிருதுலானி செல்லப்பா
12 திருமதி. ப்ரீத்தி அலெக்ஸாண்ட்ரா
திரு. பால்ராஜ்
திரு. ஆனந்த் எடி
செல்வி. பெனிஸியா சில்வர்ஸ்டார்
13 செல்வன். ஷான்
14 திருமதி. சுவீதா செலஸ்டின் ஜோசப்
வியோனா சில்வர்ஸ்டார்
15 திரு. செல்வநாதன்
செல்வி. மெர்லின் ஷீபா
திருமதி. சசி ஜேம்ஸ்
திரு. சாலமோன் சந்திரபாபு
திருமதி. எஸ்தர் ராணி
16 திரு. ஆனந்தன்
திருமதி. டீனா ரெபேக்கா
திரு. விக்டர் நைட் டேவிட்
திரு. நவராஜ் ரவீந்திரன்
17 திருமதி. ரூபி சுபராணி
திரு. ஜான் ஜெபதுரை
18 திரு. டேவிட் லிவிங்ஸ்டன்
திரு. கிருபை நாயகம்
திருமதி. ஜரீன் ரவீந்திரநாத்
செல்வி. ஜெஸிகா
19 செல்வி. பிரிஸில்லா
திருமதி. எஸ்தர் ஜெபராஜ்
திருமதி. Dr சாந்தி டேவிடார்
20 திருமதி. சுகந்தி சந்திரன்
செல்வன். நிவான் கார்வின்
திருமதி. ராஜகுமாரி டேவிட்
21 திரு. மோகித் ராஜ்
22 திரு. ஜேஸன்
திருமதி. ராஜகுமாரி ராய் டேவிட்
திருமதி. ஜெயசீலி
திருமதி. பிரீத்தி (ஏ) பிரதீபா
23. திருமதி. செல்வ ரூபி ஆண்ட்ரூஸ்
செல்வன். ரிக்கி சேகர்
செல்வன். தஸ்வின் சுந்தர்
திரு. ஜான் சரவணன்
திருமதி. எலிசபத்ராணி
24 திருமதி. உஷா டேவிடார்
25 செல்வி. ஜெயந்தி ஜெனிஃபர்
தரு. இம்மானுவேல் ஸ்டீஃபன்
திரு. சாலமோன்
திருமதி. ஏஞ்சல் தேவகுமாரி சாமுவேல்
26 செல்வன். சுடரவன் சரபோஜ்
திருமதி. எஸ்தர் மஞ்சுளா ஸ்டீஃபன்
28 செல்வி. ரூபி ரத்தினகுமார்
செல்வி. ஜான்சி
திருமதி. ஜான்சி ஃப்ளோரா
திருமதி. மல்லிகா ஸ்டான்லி
29 திருமதி. டோரீன் டேவிடார்
திரு. கிளாடின் பொன்ராஜ்
30 திருமதி. பேபி செல்வராஜ்
திரு. ஜான்ஸன் ஜாகர்
திருமதி. மேரி செல்வராணி கிருபைநாயகம்
திரு. தீபன்
திருமதி. மெல்பா வின்ஸியா ஜஸ்டின்



## ஏப்ரல் – 2026 தங்கள் திருமண நாள் காணுவோர் :

"நீடிய ஆயுளால் அவர்களுக்கு நிறைவளிப்பேன்;
என் மீட்பை அவர்களுக்கு வெளிப்படுத்துவேன்." திருப்பாடல்கள் 91.16

08 திரு.ஸ்டீஃபன் – திருமதி.ஜாய்ஸ் பியுலா தம்பதியினர்
11 திரு. ஜான் திலக் மோசஸ் – திருமதி. அதகா ஜான் தம்பதியினர்
12 திரு. ராஜாசிங் – திருமதி. ஏஞ்சலின் நிவிதா தம்பதியினர்
15 திரு. ஜீவா வசந்தன் – திருமதி. எலன்டியானா தம்பதியினர்
22 திரு. ஜேசன் – திருமதி. ஷீபா ஃப்ளாரன்ஸ் தம்பதியினர்
23 திரு. ஜெயசிங் – திருமதி. பாக்கிய ஷீலா தம்பதியினர்
திரு. லூக் ஜெயராஜன் – திருமதி. யோகேஸ்வரி ஜாஸ்மின் தம்பதியினர்
28 திரு. ராஜாசிங் டேவிட் – திருமதி. வசந்தகுமாரி தம்பதியினர்

## கிராம ஊழியம்

**26.04.2026 நான்காம் ஞாயிற்றுக்கிழமை** மாலை 4.00 மணிக்கு நமது நற்செய்திப் பணித்தளங்களில் நடைபெறும். இதில் பங்குபெற அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

## VBS-2026
### விடுமுறை விவிலியப் பள்ளி




செம்பொருள் : **இயேசுவிடம் வாருங்கள்**
Them : **Come to Jesus**
நடைபெறும் நாட்கள் :
26.04.2026 முதல் 03.05.2026 வரை

***பேராயத்தால் நடத்தப்படும் விடுமுறை விவிலிய பள்ளி ஆசிரியர் பயிற்சி வகுப்பில் பங்குபெறுவோர் மட்டுமே விடுமுறை விவிலிய பள்ளி ஆசிரியர்களாக நடத்திட அனுமதிக்கப்படுவார்கள்***

## கிளை சபைகள் ஏப்ரல் - 2026

### தங்கள் பிறந்த நாள் காணுவோர் :

*பேரிஞ்சம்பாக்கம்*

07.04. பிரசாந்த்

17.04. சுஜிதா

20.04. பிரின்ஸி

29.04. ஷைனி

*பனையூர்*

01.04. திருமதி. சலோமி

07.04. திருமதி. ராணி

12.04. திரு. ஜெயப்பிரகாஷ் டேனியல்
திருமதி. ஏஞ்சலின்

13.04. திரு. ஸ்டீஃபன் பால்

14.04. திருமதி. நிர்மலா

17.04. திருமதி. குளோரி

*வடமேல்பாக்கம்*

03.04. திருமதி. ஜெலின்

07.04. மாஸ்டர். ரிச்சர்ட் ஜெய்சன்

12.04. செல்வி. ஜெனிஃபர் மேன்சி

13.04. செல்வி. பிரியங்கா

14.04. மாஸ்டர். ஜான் இன்பராஜ்

16.04. திருமதி. எமி தங்கம்

20.04. திருமதி. ஷீபா சாலமன்

28.04. எஸ்தர் சொர்ணலதா

*சென்னாகுப்பம்*

15.04. கைலாஷ்

26.04. காபிரியேல்

*சாலமங்கலம்*

01.04. செல்வன். லூக்காஸ் டேனியல்

04.04. திரு. விசுவாசப்பாண்டி

12.04. திரு. விக்சன்

### தங்கள் திருமண நாள் காணுவோர் :

*பேரிஞ்சம்பாக்கம்*

01.04. திரு & திருமதி. பிரவீன்குமார்

05.04. திரு & திருமதி. வினோதினி

*பனையூர்*

19.04. திரு . மேஷாக்
திருமதி. ரெபேக்காள்

*சாலமங்கலம்*

04.04. திரு & திருமதி. எஸ்றா மீகா

*வடமேல்பாக்கம்*

20.04. திரு. சாம்சன்
திருமதி. எஸ்தர் சொர்ணலதா





## ஏப்ரல் மாத வேத வினா பகுதி

**2 நாளாகமம் 10 -21**

1. வேத புத்தகத்தை வைத்து சுவிசேஷ ஊழியத்தை விரிவுபடுத்தியது யார் ?
2. "யுத்தம் உங்களுடையது அல்ல, தேவனுடையது" என கூறியவர் யார் ?
3. அறுபது குமாரத்திகள் இருபத்தெட்டு குமாரர்கள் பெற்றது யார் ?
4. சாலொமோன் செய்த பொன் பரிசுகளை எடுத்துப்போன ராஜா யார் ?
5. கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தின இடத்தின் பெயர் ?
6. தன் தாய் ராஜாத்தியாய் இராதபடிக்கு விலக்கின ராஜா யார் ?
7. யூதாவெங்கும் உபவாசத்தைக் கூறினவன் யார் ?
8. யாருடைய ராஜ்யபாரம் அமரிக்கையாயிருந்தது ? அவன் தாயின் பெயர் என்ன ?
9. எலியா எழுதின நிருபம் யாரிடத்தில் வந்தது ?
10. யோசபாத்தின் குமாரர்கள் யார் ? யார் ?

## வேத வினா : சரியாகப் பொருத்துக.

(2 நாளாகமம் 10-21)

| | | |
|---|---|---|
| 1. யோகனதனும் அமசியாயும் | X | அபியா |
| 2. யெகூ | X | சிதேக்கியா |
| 3. நுகத்தை பாரமாக்கினார் | X | ஆகாப் |
| 4. தீராத குடல் நோயினால் வாதிக்கப்பட்டவர் | X | எங்களுக்கு லகுவாக்கும் |
| 5. ரெகொபெயாம் | X | ஞானதிருஷ்டிக்காரன் |
| 6. பொல்லாப்பு செய்கிறவன் | X | ஆசாவுக்கு |
| 7. முப்பதெட்டுபிள்ளை பெற்றவன் | X | குடல்நோய் |
| 8. மிகாயாவை கன்னத்தில் அடித்தவன் | X | உதவியாயிருந்தார்கள் |
| 9. தன் கையில் நோவு மிக உக்கிரமாயிருந்தது | X | அகசியா |
| 10. வேஷம் மாறி யுத்தத்தில் பிரவேசித்தவன் | X | திடனற்ற மனது |

திருமதி ராய் டேவிட்

**விடைகளை ஏப்ரல் 25-ம் தேதிக்குள் அனுப்பவும்**

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி :
**CSI** *கிறிஸ்து நாதர் ஆலயம்*
6/371, ஞானம்மாள் ரோடு, டேவிட் நகர், படப்பை - 601 301.

## மார்ச் மாத வேத வினாப் போட்டி – சரியான விடைகள் :

| | | |
|---|---|---|
| 1. | 2 நாளாகமம்.... 1 : 10 | ஞானத்தையும் விவேகத்தையும் கேட்டான் |
| 2. | 2 நாளாகமம்.... 3 : 1 | மோரியா மலை, ஒர்னானின் களத்தில் |
| 3. | 2 நாளாகமம்.... 2 : 13 | அபியென் என்னும் நிபுணன் |
| 4. | 2 நாளாகமம்.... 5 : 2 | சீயோன் என்னும் தாவீதின் நகரத்திலிருந்து |
| 5. | 2 நாளாகமம்.... 9 : 18,19 | சிங்காசனத்தின் ஆறு படிகளிலும் |
| 6. | 2 நாளாகமம்.... 2 : 5 | கட்டப்போகிற ஆலயமும் பெரிதாயிருக்க விரும்பினான் |
| 7. | 2 நாளாகமம்.... 5 : 13 | ஏகசத்தமாய் கர்த்தரைத் துதித்துப் பாடும்போது |
| 8. | 2 நாளாகமம்.... 9 : 9 | சேபாவின் ராஜஸ்திரி |
| 9. | 2 நாளாகமம்.... 8 : 17 | ஏதோம் கடல்ஓரம் எசியோன்கேபேர் ஏயோத்துக்கும் |
| 10. | 2 நாளாகமம்.... 9 : 22,23 | சாலமோனின் |

**பெண்களுக்கான வேதவினாப் போட்டி**


**மார்ச் மாதம் சரியான விடைகள் அனுப்பியவர்களை வாழ்த்துகிறோம்.**

திருமதி. ஷாலினி சாம்
திருமதி. ஜெயராணி விக்டர்
திருமதி. லிதியா அன்புகனி
திருமதி. கலா இம்மானுவேல்
திருமதி. பொன்மதி தர்மராஜ்
திருமதி. ஸ்டெல்லா மேஷாக்
திருமதி. எஸ்தர் சாம் சுந்தர்
திருமதி.. ஜெமிமா ஹாப்டே
திருமதி. எமீமாள் வேதநாயகம்
திருமதி. மல்லிகா ஸ்டான்லி
திருமதி. ஞானதீபம் கிறிஸ்டி
திருமதி. செல்வரூபி ஆண்ட்ரூஸ்
திருமதி. அபிகாயில் மனோரஞ்சிதம்
திருமதி. ஜெபகுமாரி செல்வமதி
திருமதி. பிளஸ்சி பியுலா மேரி
திருமதி. செல்வகுமாரி
திருமதி. ஜாய்ஸ் ராஜா சாமுவேல்
திருமதி. ஆலிவ் எபன்
திருமதி. ஷைலா ரெபேக்கா
திருமதி. புனிதவதி வீரபாண்டியன்
திருமதி. பானுமதி
திருமதி. ரத்னா அம்புரோஸ்
திருமதி. கீதா கௌதமி
திருமதி. ஜாய் கென்னடி
திருமதி. கிருபாவதி
திருமதி. ஃப்ளைமினி கிறிஸ்டோஃபர்
திருமதி. குளோரி ஸ்டீஃபன்பால்
திருமதி. ஜான்சி
திருமதி. கமலா ஜெரேமியா
திருமதி. டாரதி ஸ்டீஃபன்
திருமதி. பெரில் பாஸ்கர்
திருமதி. மஞ்சு ஆனந்தகுமார்
திருமதி. ஏஞ்சல்ஸ் மேஷாக்
திருமதி. பிரேமா கிறிஸ்டோஃபர்
திருமதி. ரோஸ்லின் வட்சலா
திருமதி. அமுதா அப்பாதுரை
திருமதி. ஸ்வீனா பிரவீன்
திருமதி. எமிலி லில்லி ஜாய்ஸ்
திருமதி. நிருபா சார்லஸ்
திருமதி. வசந்தி டேவிட்
திருமதி. ஸ்டெல்லா ஸடீஃபன்
திருமதி. ஏஞ்சலின் ரூஃபஸ்
திருமதி. ஹாரியம் அற்புதா
திருமதி. பெனிடா டேனிஷ்



## ஆண்களுக்கான குறுக்கு எழுத்துப்போட்டி
## ஏப்ரல் மாதம் – 2026

2 தெசலோனிக்கியர் முழுவதும்



**இடமிருந்து வலம் :**

1. உங்களில் எது பெருகுகிறபடியினால் தேவனை ஸ்தோத்தரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம் என்று பவுல் சொல்கிறார் ?
5. அக்கிரமத்தின் ................. இப்பொழுதே கிரியை செய்கிறது.
7. இயேசுகிறிஸ்து நம்மிடத்தில் அன்பு கூர்ந்து................ ஆறுதலையும் கொடுத்தார்.
8. ................ பொல்லாத மனுஷர் கையினின்று எங்களை விடுவிக்கும்படி வேண்டிக் கொள்ளுங்கள்.
10. தம்முடைய வருகையின் ........................ நாசம்பண்ணுவார்

**மேலிருந்து கீழ் :**

2. இயேசு வல்லமையின் தூதரோடு எங்கிருந்து வெளிப்படுவார் ?
3. கிறிஸ்துவின் வருகைக்கு முன்பாக விசுவாச.................முந்தி நேரிடும்.
4. கேட்டின் மகன் எங்கு தேவன் போல் உட்காருவான் ?
6. ..............விசுவாசிக்கிறதினால் இரட்சிப்படையும் படி தேவன் உங்களை தெரிந்து கொண்டார்.
9. கர்த்தர் தாமே சகலவிதத்திலும் உங்களுக்கு ............. தந்தருளுவாராக.

**விடைகளை ஏப்ரல் 25-ம் தேதிக்குள் அனுப்பவும்.**

## ஆண்களுக்கான குறுக்கெழுத்துப் போட்டி

*மார்ச் மாதம் சரியான விடைகள் அனுப்பியவர்களை வாழ்த்துகிறோம்.*

திரு. சுரேஷ்ராஜா
திரு. ஆனந்த குமார்
திரு. பிரான்சிஸ்
திரு. செல்வபிரேம்
திரு. டேவிட் ராஜ்குமார்
திரு. சாலமன்
திரு. அகஸ்டின் ஜெயபால்
திரு. ஆண்ட்ரூஸ்
திரு. ஸ்டான்லி ராஜ்குமார்
திரு. ஐசக் டேனியல்
திரு. சாலமன் வில்லியம் ஹாப்டே
திரு. பஞ்சம்
திரு. ராஜ்குமார்
திரு. டேனிஷ் பிரபாகர்
திரு. பால்ராஜ்
திரு. அனிஷ்குமார்
திரு. நிவின் கார்வி
திரு. சாம் மோசஸ்
திரு. பால்ராஜ்
திரு. டேனிஷ் பிரபாகர்
திரு. டியூக் இம்மானுவேல்
திரு. ராஜா சாமுவேல்
திரு. சாலமோன் சந்திரபாபு
திரு. மேஷாக்
திரு. கிறிஸ்டோபர் அசரியா
திரு. வின்செண்ட் ஜெயராஜ்

## மார்ச் மாதம் ஆண்களுக்கான குறுக்கு எழுத்துப் போட்டிக்கான விடைகள்

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | 3↓ | | | | | |
| | | | | | | | | | வி | | | | | |
| | | | | 8↓ | | | 7→ | ப | க் | தி | வி | ரு | த் | தி |
| | | | | வா | | | 5→ | ம | கி | மை | | | | |
| 10→ | ந | ல | மா | ன | தை | | | 4→ ப | ர | லோ | க | ம் | | |
| | | | 6→ அ | த் | தே | னே | 9→ | மே | க | ங் | க | ள் | | |
| | | | 2→ | தி | ரு | வ | ச | ன | ம் | | | | | |
| | | 1→ | சி | ல் | வா | ன் | | | | | | | | |





**ஆண்கள் ஐக்கிய சங்கம், படப்பை**

## ஏப்ரல் – 2025
## திருமறை ஆய்வு – Bible Study

"உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படி,
என் கண்களைத் திறந்தருளும்." சங்கீதம் 119:18

திருமறை ஆய்வு
புதன்கிழமைகளில் மாலை 7.30 மணி முதல் 8.30 மணி வரை

| | | | |
|---|---|---|---|
| இரண்டாம் வாரம் | 08.04.2025 | - | **திரு. முத்துராஜா** |
| மூன்றாம் வாரம் | 15.04.2025 | - | **Dr விஜயகுமார்** |
| நான்காம் வாரம் | 22.04.2025 | - | **Rev. Y. தேவகுமார்** |
| ஐந்தாம் வாரம் | 29.04.2025 | - | **திரு. ராபின் சுந்தர்ராஜ்** |

ஆயர்
**9840198476**

திரு. பெனடிக்ட் ஆபிரகாம்
கன்வீனர்
**9443011345**

" 'நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள்' என்றார்.' " மத்தேயு 21:22

## ஏப்ரல் மாத உபவாசக் கூடுகை - 2026

**11.04.2026 சனிக்கிழமை**
காலை 10:00 மணிமுதல் 1:00 மணி வரை
இடம்: **CSI கிறிஸ்து நாதர் ஆலயம்**





**தலைமை :**
**Rev. Y.** ***தேவகுமார்,***
ஆயர்

**இறைச் செய்தி :**
***திரு. ஸ்டான்லி*** அவர்கள்
சிறப்புச் செய்தியாளர்

துதி ஆராதனை, சிறப்புப் பாடல்கள், சாட்சிகள், தேவ செய்தி, ஜெபவேளை
அனைவரும் ஒருமித்து ஜெபிக்க இது ஒரு நல்ல வாய்ப்பு!

***அனைவரும் பங்கேற்போம் !*** ***(மதிய உணவு வழங்கப்படும்.)***

CSI கிறிஸ்துநாதர் ஆலயம் – படப்பை குருசேகரம்

## குடும்ப ஜெபக்கூடுகை நடைபெறும் இல்லங்கள்

நாள்: பிரதி வியாழன் நேரம் : மாலை 7.00 மணி

**ஏப்ரல் – 2026**

**09** *திரு. கிறிஸ்டோபர் பாஸ்கரன் – திருமதி. ஃப்ளோரா*
நெ.6/634, பார்ம் ரோடு, டேவிட் நகர்,
படப்பை – 601 301.
98407 70203

**16** *திரு. சூர்யா – திருமதி. சந்தியா*
ஆலயப் பணியாளர் இல்லம்
ஞானம்மாள் ரோடு, டேவிட் நகர்,
படப்பை – 601 301.
81110 02970

*தொடர்புக்கு :*

ஆயர்
98401 98476

திரு. டேனிஸ் பிரபாகர், கன்வீனர்
98418 51476

**ஜெபத்தேவைகள்**

நமது சாலமங்கலம் தூய பேதுரு ஆலயம் நிறைவு கட்டுமானப் பணிகளுக்காக ஜெபியுங்கள்

ஆலய கட்டுமானப் பொருட்கள் (ம) ஆலய பயன்பாட்டு பொருட்களை தங்கள் குடும்பத்தின் சார்பாக வழங்கி இப்பணி விரைந்து முடிக்கப்பட அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

ஆயர்




## மார்ச் மாதம் வண்ணம் தீட்டுதல் போட்டியில் பங்கேற்ற பிள்ளைகள் :

| | |
|---|---|
| ஜா. ராபின்சன் | |
| வி. காலேப் | – 6ம் வகுப்பு |
| ஜே. ஆதிரயன் | – 3ம் வகுப்பு |
| ஜே. அதிரியா | – 3ம் வகுப்பு |
| சே. சஜித் மேத்யூ | – 1ம் வகுப்பு |
| பெத்தானி | – |
| பெனியேல் மார்கஸ் | – 1ம் வகுப்பு |
| ஜோவிட்டா | – Pre-KG |
| எம்.ஜெரிக் நத்தானியேல் | – LKG |
| தவிஸ் டாவின் | – 4ம் வகுப்பு |
| ஜெர்ஷோன் | – 2ம் வகுப்பு |
| எஸ். ஜெஸ்லின் | – LKG |
| எம். சைன் ஐசக் | – 21/2 வயது |
| ஆ. மைக்கேல் ராஜா ஐசக் | – 41/2 வயது |
| ரூ.ஏ. மிஸ்ட்டி மார்ட்டினா | – 5ம் வகுப்பு |
| ரூ.ஏ. ரியானா அகெஸ்டி | – 2ம் வகுப்பு |
| ஐடா ஏஞ்சலின் | – 1ம் வகுப்பு |
| எஸ். ஆதன் | – 1ம் வகுப்பு |
| பி. லிடியா மிரக்ளின் | – 31/2 வயது |
| ஆ.ஸ்டார் மீகா | – 4ம் வகுப்பு |
| எம். ஃபீபி ஜொவனா | – Pre-KG |
| எப். அபிஷா | – 6ம் வகுப்பு |
| தீ. ஈத்தன் ஜெரேமியா | – 4ம் வகுப்பு |
| ஷெர்லின் சான்ட்ரா | – 3ம் வகுப்பு |
| ஆ. அன்புராஜன் | – 4ம் வகுப்பு |
| ஆதவன் | – 1ம் வகுப்பு |
| எப். பிளஸ்வின் | – 5ம் வகுப்பு |
| எஸ். ஜெரிட்டா மெர்ஸி | – 5ம் வகுப்பு |
| எஸ். ஜோஸ்லின் | – 4ம் வகுப்பு |
| மர்லியா பிளஸ்ஸி | – 3ம் வகுப்பு |
| டி. ஈனோக் மேத்யூஸ் | – 2 வயது |
| எலைசா மிரக்ளின் | – 2ம் வகுப்பு |
| ஹிவின்த் | – 2ம் வகுப்பு |
| இவான்தி | – 5ம் வகுப்பு |
| அமெண்டா | – 4ம் வகுப்பு |



## சிறுவர் பகுதி வண்ணம் தீட்டுதல்

(10 வயதுக்கு உட்பட்ட சிறு பிள்ளைகள் மட்டும்)



பெயர் :

வகுப்பு : கையொப்பம்

**வண்ணம் தீட்டிய படத்தை ஏப்ரல் 25-ம் தேதிக்குள் ஆலயத்தில் சேர்க்கவும்.**

வண்ணம் தீட்டி அனுப்புகிறவர்கள் தங்கள் பெயரைத் தமிழில் தெளிவாக எழுதவும்.



## மூத்தோர் பகுதி

மரித்து உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவின் பெரிதான நாமத்தினாலே மூத்தோர் ஒவ்வொருவருக்கும் ஈஸ்டர் வாழ்த்துக்கள்! "அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்" மத்தேயு 28:6. பிசாசின் திட்டங்களை உடைத்து, இயேசு வெற்றி சிறந்தவராக உயிர்த்தெழுந்தார். அவர் மரித்தோரிலிந்து உயிர்த்தெழுந்து வல்லமையுள்ள தேவகுமாரன் என்று நிரூபிக்கப்பட்டார். நித்திரையடைந்தவர்களின் முதற்பலனானார். இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மரணத்திற்கு பின் வாழ்வு உண்டு என்ற நம்பிக்கையை நமக்குக் கொண்டு வருகிறது.

முதியோரை அதிகமாக தாக்கும் ஞாபகமறதி **(Dementia)** என்ற நோய், பெரும்பாலும் பெண்கள், கல்வியறிவில் குறைவானவர்கள் மற்றும் கிராமங்களில் வசிப்பவர்களுக்கு அதிகம் ஏற்படுகிறது. இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுகு நினைவுத்திறன், சிந்திக்கும் திறன் மற்றும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் திறன் குறைந்து விடுகிறது.

**இதற்கான காரணங்கள் :**

மூளையில் உள்ள செல்கள் குறைவது, பக்கவாதம் போன்ற நோய்களின் தாக்கம்.

**இந்நோய்க்கான சில அறிகுறிகள்:**

1. அடிக்கடி பொருட்களைத் தொலைத்தல்
2. பழக்கமான இடங்களை மறந்து போதல்
3. ஒரே கேள்வியை மீண்டும் மீண்டும் கேட்பது

**இதனைத்தவிர்க்கவும், மேற்கொள்ளவும் :**

1. புத்தகங்கள் வாசித்தல் 2. புதிர் விளையாட்டுக் போன்ற மனப்பயிற்சிகளில் ஈடுபடுதல் 3. உடற்பயிற்சி மூலம் மூளைக்கு இரத்த ஓட்டத்தை அதிகரிதத்ல் 4. உறவினர் மற்றும் நண்பர்களுடன் உரையாடி மனஅழுத்தத்தை குறைத்தல் உணவில் பாதாம், வால்நட் கொட்டைகள், கீரைகள் மற்றும் மீன் போன்ற சத்தான உணவுகளை அதிகமான சேர்த்துக் கொள்ளவும் வேண்டும். எந்த நோய் ஏற்பட்டாலும் உடனடியாக மருத்துவரை அணுகி, ஆலோசனையும் சிகிச்சையும் பெறுவது மிகவும் அவசியம். கிண்டியில் முதியோருக்கான **(Geriatrics)** சிறப்பு மருத்துவமனை ஒன்றை மத்திய மற்றும் மாநில அரசுகள் இணைந்து ஆரம்பித்துள்ளன **Guindy National Center of Ageing.** இங்கு இலவசமாகவும் கட்டண முறையில் சிகிச்சை பெறலாம்.

உயிர்த்தெழுந்த கிறிஸ்து தாமே உங்களுக்கு சமாதானத்தையும் மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் நீண்ட ஆயுளையும் அருள்வாராக.

தொடர்புக்கு:

**ஆயர்**
9840198476

**நவராஜ் ரவீந்திரன்**
மூத்தோர் ஐக்கியம் கன்வீனர்
90808 18761